எகிப்து தேசத்திலே கர்த்தரின் அடையாளம்



In Egypt's land the signs of God were shown

Album 20 Song 6

Song 6 எகிப்து தேசத்திலே கர்த்தரின் அடையாளம்

Exodus 7–12 – God’s signs/plagues in Egypt, judgment on Pharaoh, protection for Israel, Passover. Shows God’s power over creation and deliverance. Points to Christ, the ultimate Passover Lamb (1 Cor 5:7).

எகிப்து தேசத்திலே கர்த்தரின் அடையாளம்
சோவான் வெளியிலே தேவனின் அற்புதம்
தெரியுதே தெரியுதே கர்த்தர் செய்ததெல்லாம் தெரியுதே
புரியுதே புரியுதே கர்த்தரின் காரியமெல்லாம் புரியுதே

எகிப்து தேசத்திலே கர்த்தரின் அடையாளம்
சோவான் வெளியிலே தேவனின் அற்புதம்
தெரியுதே தெரியுதே கர்த்தர் செய்ததெல்லாம் தெரியுதே
புரியுதே புரியுதே கர்த்தரின் காரியமெல்லாம் புரியுதே

KJC DNN

நதிகளை இரத்தமாக மாற்றினவர் நீரே
ஜலத்தைக் குடிக்காதபடி செய்தவரும் நீரே
அழிக்கும் வண்டுகளை அனுப்பினவர் நீரே
கெடுக்கும் தவளைகளையும் அனுப்பினவர் நீரே

எகிப்தின் விளைச்சலை புழுக்கழுக்கு கொடுத்தீரே
பிரயாசத்தின் பலனை வெட்டுக்கிளிகளுக்கும் கொடுத்தீரே
திராட்சைச் செடிகளை கல்மழையினால் அழித்தவரே
அத்திமரங்களை ஆலங்கட்டியினாலும் அழித்தவரே

மிருக ஜீவன்களை கல்மழைக்கு ஒப்புக்கொடுத்தீரே
ஆடுமாடுகளை இடிகளுக்கும் ஒப்புக்கொடுத்தீரே
உக்கிரமான கோபத்தை எகிப்திற்கு அனுப்பினீரே
தீங்குசெய்யும் தூதர்களையும் அங்கே அனுப்பினீரே

எகிப்து தேசத்திலே கர்த்தரின் அடையாளம்
சோவான் வெளியிலே தேவனின் அற்புதம்
தெரியுதே தெரியுதே கர்த்தர் செய்ததெல்லாம் தெரியுதே
புரியுதே புரியுதே கர்த்தரின் காரியமெல்லாம் புரியுதே

கர்த்தரின் கோபத்திற்கு வழியை திறந்தாரே
ஜீவனை கொள்ளை நோய்க்கு ஒப்புக்கொடுத்தாரே
எகிப்திலே தலைச்சன்களை அனைத்தையும் அழித்தவரே
காமின் கூடாரங்களின் முதற்பலனையும் அழித்தவரே

ஆடுகளைப்போல் ஜனங்களைப் புறப்படப் பண்ணினவரே
மந்தைகளைப் போலவே கூட்டி கொண்டுபோனவரே
ஜனங்களை பத்திரமாய் வழிகாட்டி நடத்தினீரே
சத்துருக்களைக் கடலுக்குள்ளே மூடிபோட்டவரே

ஜனங்களைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு கொண்டு வந்தவரே
வலக்கரத்தால் சம்பாதித்த பர்வதத்திற்குள் சேர்த்தவரே
தேசத்தில் எதிரிகளைத் துரத்தி விட்டவரே
தேசத்தை நூல்போட்டு பங்கிட்டு குடியேற்றினாவரே

எகிப்து தேசத்திலே கர்த்தரின் அடையாளம்
சோவான் வெளியிலே தேவனின் அற்புதம்
தெரியுதே தெரியுதே கர்த்தர் செய்ததெல்லாம் தெரியுதே
புரியுதே புரியுதே கர்த்தரின் காரியமெல்லாம் புரியுதே



"In Egypt's land the signs of God were shown"

Album 20 Song 6